1971 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

" தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் " என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(எ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திற்கான காரணங்களையும் விளக்கங்களையும் ஏற்கனவே, பலரும் காரசாரமாகப் பேசி விட்டதால் அதிகமாக விவாதம் இருக்க முடியாது. சொல்ல வேண்டிய முக்கியமான காரணங்கள் எல்லாம் சொல்லியாகி விட்டது. இதற்கு அரசின் திருத்தம் மட்டும் ஒன்றிருக்கிறது. அதை அந்தப் பிரிவு வரும்போது சொல்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தின்படி, ஒரு யூனியன் மாவட்ட அளவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வட்டார அளவில் கூட்டுறவு யூனியன்கள் இருக்கின்றன. அதற்கு மேல் மாவட்ட அளவில் ஒரு யூனியனைச் சேர்த்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய யூனியனும் தேவையற்றது என்று எல்லோருக்கும் தெரியும். மத்திய பேங்கிற்கு நிர்வாகஸ்தரை தேர்ந்தெடுப்பதற்கு மட்டும் தான் இது உபயோகமாக இருந்து வந்தது. மேல்மான்டு வசூல் போன்றவற்றை நிர்வகிக்க சூப்பர்வைசர்கள், மேற்பார்வையாளர்கள் இருக்கிறார்கள் எனவே, இந்தக் கூட்டுறவு யூனியன் தேவையற்றது. இதனால், காலதாமதமும், வீண் செலவும்தான் ஆகும். இதெல்லாம் கடன் வாங்கக்கூடிய மக்களின் மேல்தான் விழும். அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டி அதிகமாகிவிடும். பேங்கிற்கு வீண் செலவும் மக்களின்மேல் அதிக வட்டியும் ஏற்படக்கூடிய நிலைதான் இந்த திருத்தத்தினால்

* 8—12—1971-ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வரும். ஆகவே, இந்த நாற்பதாவது திருத்தம் தேவையற்றது. இதை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். தேவையற்ற இதுபோன்ற ஸ்தாபனங்கள் இருப்பதால்தான், ரிசர்வ் பேங்கிடம் 3%-க்கு வாங்கக்கூடிய கடன், கடைசியில், மக்களிடம் வரும்போது, 9% ஆக உயர்ந்து விடுகிறது. மாவட்ட யூனியன் ஆகட்டும், மாநில யூனியன் ஆகட்டும், வட்டாரத்திலுள்ள யூனியன் ஆகட்டும், இந்த மூன்று யூனியன்களாலும் செலவும் காலதாமதமும்தான் ஏற்படும். தேவையற்றது. எனவே, திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir. I entirely support the views expressed by the hon. Member Thiru Alagarswamy. I think we are running a very big show without foundation, so far as the co-operative progress is concerned. Of course, I do not agree with Mr. Latheef who said that it is a co-operative robbery. If this country has to progress on socialistic lines, we must encourage co-operative societies. Wherever there is anything wrong, we must try to rectify it.

There are now Taluk Societies, Apex Societies, District Societies and others to look after the business. The main function of this Union according to this Bill is this—that is the Co-operative Union. The object is only to educate and do propaganda, etc. I think for this purpose a Union is not necessary at all. What we want is, co-operative societies should function well.

If politics should be avoided in co-operative societies, I think there should be a greater interference by Government in co-operative societies. I do not believe that the Government should not interfere. Government should supervise and interfere wherever it is necessary and should rectify the defects. Any number of people belonging to scheduled castes can be nominated. It is necessary. It is good. It is a progressive step. But it cannot be confined to D.M.K. members. It cannot be confined to particular political parties. We are not against any of the so-called oppressed or depressed lower class people coming into the societies. This is the time we should encourage such things. What we want is, it should not be politicalised. It takes a long time in a country like India which was very backward for thousands of years to instill the habit of co-operation. It is a very difficult affair and it has to be tackled very wisely and very cleverly for which we should have best officers. There is no doubt about it. Between the Officers on the one side and the political public men on the other side, there should be good understanding. What happens in many co-operative societies or what is reported to be happening is, many of the officers are obliged to do certain things which they may not like to do under normal circumstances.

The Hon. Minister for Co-operation said that when the Government does not invest money, it does not interfere. It is wrong. It is public money that the co-operative societies are handling and so, even if the Government does not invest money the Government is responsible for looking after the co-operative urban banks, just as Government does under the banking law. Whether the Government invests money or not, public money is there and so the Government has a right to interfere. Otherwise public money is not safe. I say the Hon. Minister for Co-operation cannot run away saying 'I would not interfere'. He has every duty to interfere and see that the societies are managed properly. So, before we pass this Bill, once again I stress the need for a comprehensive Bill or a consolidated Bill . . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை முன் வைக்கப் பட்டிருக்கிற சட்டத்தைப்பற்றி மட்டும் பேசினால் நன்றாக இருக்கும். சட்டத்தில் இல்லாததைப்பற்றி எல்லாம் பேசுவது சரியல்ல. முதலில் நமக்கு நேரமும் இல்லை. இந்த முறையைக் கூடத் தெரிந்துகொள்ளாதவாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியல்ல. பிற்பகல் 1-30

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I protest . . . . . .

(Mr. Speaker sounded the gong).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து அப்போது பேசுவார்கள். பிற்பகல் 1-32

THIRU K. M. SUBRAMANIAM : I thank you, Sir.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.